## கரூர் மாநகராட்சி

**2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## <u>பொருள்கள்</u>

**1)** கரூர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனகடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு மத்திய அரசால் விதிக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி 18% கடை உரிமதாரர்களிடம் 01.07.2017 முதல் 31.03.2020 முடிய உள்ள காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.9780358/– (தொண்ணூற்றி ஏழு இலட்சத்து எண்பதாயிரத்து முன்னூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) கொரோனா தொற்று காரணமாகவும், நிர்வாக காரணங்களாலும் GST எண் பெறுவதில்தாமதம் ஏற்பட்டு 22.04.2020–ல் செலுத்தப்பட்டது.

மேற்படி வசூலிக்கப்பட்ட தொகை உரிய காலத்தில் செலுத்தாதற்கு உதவி ஆணையர் மத்திய கலால் மற்றும் (சரக்குமற்றும் சேவைவரி) துறை, கரூர் அவர்களின் கடிதம் F.No.GEXCOM /ADMIN/GST/572/202,நாள்.27.12.2021–ல் வட்டி தொகை ரூ.1342797/– (ரூ.பதிமூன்று இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து எழுநூற்றி தொண்ணூற்றி ஏழு மட்டும்) மற்றும் அபராத தொகை 25% செலுத்த கோரி அறிவிப்பு வரப்பெற்றது. மேற்படி அறிவிப்பாணைக்கு நேரில் ஆஜராகி தாமதத்திற்கு விளக்கமும் கடிதம் வாயிலாகவும் மேற்படி வட்டி மற்றும் அபராத தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இரத்து செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆனால் மேற்படி விளக்கத்தினை ஏற்காமல் உதவி ஆணையர் மத்திய கலால் மற்றும் (சரக்கு மற்றும் சேவைவரி) துறை, கரூர் அவர்களின் கடிதம் F.No.GEXCOM /ADMIN/ GST/ 572/2021 நாள்.15.09.2022–ல் மேற்படி வட்டி தொகை மற்றும் அபராத கட்டணம் 25% உறுதி செய்து ஆணையர் மத்திய கலால் (சரக்கு மற்றும் சேவை வரி) துறை, திருச்சி அவர்களுக்கு மேல்முறையீடு செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி வட்டித் தொகை மற்றும் அபராத தொகை செலுத்துவதிலிருந்து விலக்களித்து இரத்து செய்ய கோரி ஆணையர் மத்திய கலால் (சரக்குமற்றும் சேவைவரி) துறை, திருச்சி அவர்களின் மறு ஆய்விற்கு மேல்முறையீடு செய்யவும், மேலும் திரு.வி.அழகப்பன் (CA) பட்டய கணக்காயர் திருச்சி அவர்கள் மூலம் மேல்முறையீட்டு அறிக்கை தயார் செய்து அறிக்கை தாக்கல் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேல்முறையீட்டு அறிக்கை திரு.வி.அழகப்பன், (CA) பட்டய கணக்காயர் அவர்கள் மூலம் தாக்கல் செய்யவும் அதற்கான கட்டணம் ரூ.23600/– வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(201/2013/அ6)**

**தீர்மான எண்.882** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட காலியாகவுள்ள கடைகள் பலமுறை ஏலம் கோர ஒருவரும் முன்வராத காரணத்தினால், மேற்படி காலியாக உள்ள கடைகள் (55 எண்ணம்) நேராய்வு செய்ய நகரமைப்பு அலுவலர், இளநிலை பொறியாளர், வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் அடங்கிய குழு அனைத்து கடைகளின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை செய்ய உத்திரவிடப்பட்டது.

அதன்படி மேற்கண்ட குழுவால் ஆய்வு செய்து நல்ல நிலையில் உள்ள கடைகள் மற்றும் பழுதடைந்து இடிக்கப்பட வேண்டிய கடைகள் குறித்து கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

**நல்ல நிலையில் உள்ள கட்டிடங்கள் (பொது ஏலம் விடப்பட வேண்டியவை)**

| வ. எண். | கடையின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 | ஆசாத் சாலை கடை எண்.6 | நல்லநிலையில் உள்ளது |
| 2 | வெங்கடேஸ்வரா சாலை கட்டிட எண்.17 | நல்லநிலையில் உள்ளது |
| 3 | புதிய பேருந்து நிலைய கோவை சாலை கடை எண்.6 | நல்லநிலையில் உள்ளது |
| 4 | இனாம் கரூர் OHT முதல் தளம் கடை எண்.3 | முகப்பு மேற்கூரைகள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| 5 | இனாம் கரூர் OHT கடை எண்.4 | முகப்பு மேற்கூரைகள் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| 6 | சேலம் மெயின் ரோடு முதல் தள கடை எண்.1 | நல்லநிலையில் உள்ளது |
| 7 | சேலம் மெயின் ரோடு தரை தள கடை எண்.3 | நல்லநிலையில் உள்ளது |
| 8 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.6 | நல்லநிலையில் உள்ளது |
| 9 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.7 | நல்லநிலையில் உள்ளது |
| 10 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.8 | நல்லநிலையில் உள்ளது |
| 11 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.9 | நல்லநிலையில் உள்ளது |
| 12 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.12 | நல்லநிலையில் உள்ளது |
| 13 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.14 | நல்லநிலையில் உள்ளது |
| 14 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.15 | நல்லநிலையில் உள்ளது |
| 15 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.16 | நல்லநிலையில் உள்ளது |
| 16 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.17 | நல்லநிலையில் உள்ளது |
| 17 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.18 | நல்லநிலையில் உள்ளது |
| 18 | புதிய பேருந்து நிலைய வடபுறம் மாடி கடை எண்.20 | நல்லநிலையில் உள்ளது |
| 19 | வெங்கடேஸ்வரா சாலை கட்டிட கடை எண்.14 | நல்லநிலையில் உள்ளது |
| 20 | பிரதட்சணம் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மினிபேருந்து நிலைய கடை எண்.6 | நல்லநிலையில் உள்ளது |

**இடிப்பப்பட வேண்டியவை**

| வ. எண். | கடையின் விவரம் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண்.1 | இடிக்கப்பட உள்ளது |
| 2 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.1 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 3 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.2 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 4 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.3 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 5 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.4 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 6 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.5 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 7 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை கடை எண்.7 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 8 | புதுக்குளத்துப்பாளையம் வாரசந்தை தரை தளம் கடை எண்.10 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 9 | குளத்துப்பாளையம் சந்தை கடை எண்.8 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 10 | புதுக்குளத்துப்பாளையம் சந்தை கடை எண்.1 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 11 | குளத்துப்பாளையம் சந்தை கடை எண்.12 | கட்டிடம் உபயோகமற்ற நிலையில் உள்ளது |
| 12 | புதிய பேருந்து நிலைய தென்புற மாடி A Block Room No.1 | பழுதின் காரணமாக இடிக்கப்பட்டுள்ளது |
| 13 | புதிய பேருந்து நிலைய தென்புற மாடி B Block Room No.2 | |
| 14 | புதிய பேருந்து நிலைய தென்புற மாடி B Block Room No.3 | |
| 15 | முத்துகுமாரசாமி பேருந்து நிலையம் தென்புற மாடியில் 1080 சதுரடி காலியாக உள்ள கட்டிடம் B Block Room No. | |

| | | |
|---|---|---|
| 16 | முத்துகுமாரசாமி பேருந்து நிலையம் தென்புற மாடியில் 1900 சதுரடி காலியாக உள்ள கட்டிடம் B Block Room No.4 | |
| 17 | குளத்துப்பாளையம் வாரசந்தையில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.11, 19 மற்றும் 21 முதல் 36 வரையுள்ள கடைகள் (18 Nos) | பழுதடைந்துள்ளது |

மேற்கண்ட ஆய்வு குழுவின் குறிப்பில் மேற்கண்ட கடைகள் பலமுறை பொது ஏலம் கோரப்பட்டும் ஏல வைப்புத்தொகை மற்றும் முன் வைப்புத்தொகை ஆகியவை அதிகமாக உள்ளதால் ஏலம் கோர ஒருவரும் முன்வராத நிலையில் மாநகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு நல்ல நிலையில் உள்ள கடைகள் ஏலம் முன் வைப்பு தொகை ரூ.2.00 லட்சமாக உள்ளதை ரூ.1.00 லட்சமாகவும், சொத்து மதிப்பு சான்று 10.00 லட்சம் அல்லது கூடுதல் வைப்பு தொகை ரூ.5.00 லட்சமாக உள்ளதை ரூ.2.50 லட்சமாகவும் நிர்ணயம் செய்ய குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அதன்படி பொது ஏலம் நடவடிக்கை மேற்கொள்ளவும், இடிக்கவேண்டிய கடைகளை இடித்து அப்புறப்படுத்தவும் மற்றும் பழுதடைந்துள்ள கடைகளை பொறியியல் பிரிவு மூலம் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். (1255/2020/அ6)

**தீர்மான எண்.883** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**3)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளில் 01.07.2016 முதல் 9 ஆண்டுகள் குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் 269 கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.03.07.2007ன் படி சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையிலான மண்டல கண்காணிப்பு குழுவால் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது.

இவ்வாறு வாடகை உயர்வு செய்யப்பட்டதினை எதிர்த்து இம்மாநகராட்சிக்கு எதிராக கீழ்கண்டவாறு பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன.

இதில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள 42 கடைகளின் உரிமதாரர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD)No 4448/2018 நாள்.29.11.2018 (42 கடைகள்) இம்மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் தீர்ப்புரையில் மண்டல நிர்வாக இயக்குநர், சேலம், ஆணையாளர், கரூர் நகராட்சி, வருவாய் அலுவலர், நகராமைப்பு அலுவலர், நகராட்சி பொறியாளர் ஆகியோர் தலைமையில் குழு அமைத்து மறு பரிசீலனை செய்ய உத்தரவிடப்பட்டது. இந்த குழுவிலும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை உறுதி செய்யப்பட்டது.

இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.26256/2019 நாள் 12.12.2019ன் படி 40 கடைகளின் உரிமதாரர்கள் மண்டல நிர்வாக இயக்குநர், சேலம் அவர்கள் இம்மாநகராட்சியில் ஆணையாளராக பணியாற்றியதால் வேறு ஒரு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரை கொண்ட குழுவால் மறு பரிசீலனை செய்ய வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி உத்தரவின் படி தஞ்சாவூர், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு WP(MD)No 26256/2019 நாள்.29.01.2020ல் பகரப்பட்ட உத்தரவில் மாண்பமை நீதி மன்றம் உறுதி செய்து உத்தரவிடப்பட்டது.

அதன்படி உறுதி செய்யப்பட்ட வாடகையினை செலுத்த கோரி சம்மந்தப்பட்ட 42 கடைகளின் உரிமதாரர்களுக்கும் அறிவிப்பு வழங்கியதை பரிசீலிக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதை பரிசீலிக்கவும் அச்சமயத்தில் நிலவி வந்த கொரோனா தொற்று பரவல் காரணமாக வாடகை செலுத்த கால அவகாசம் கோரியும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP(MD)No 7895/2020 நாள்.23.07.2020 (12 நபர்கள்) மற்றும் WP(MD)No 8821/2020 நாள்.06.08.2020. (5 நபர்கள்) 17 கடைகளின் உரிமதாரர்களால் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கின் தீர்ப்பில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதை பரிசீலித்து உத்திரவு பிரப்பிக்கப்பவும், மேலும் அச்சமையத்தில் நிலவி வந்த கொரோனா தொற்று பரவல் காரணமாக வாடகை செலுத்த 2 மாத கால அவகாசம் வழங்கியும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்14/2020/ஆர் 2 நாள் 14.09.2022ம் தேதிய செயல்முறைகளில், கரூர் டவுன் பேருந்து நிலைய உள் மற்றும் வெளிப்புற கடைகளின் உரிமதாரர்கள் சங்கத்தின் மூலம் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை பரிசீலித்து தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையிலான கண்காணிப்பு குழுவால் 18.01.2020ம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்ட வாடகை மறு நிர்ணய அறிக்கை மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையால் ஏற்று, கரூர் டவுன் பேருந்து நிலைய உள் மற்றும் வெளிபுற கடைகளின் உரிமதாரர்கள் சங்கத்தின் 11.07.2020 நாளிட்ட மேல் முறையீட்டு மனுவினை நிராகரித்து உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவினை எதிர்த்து 9 கடைகளின் உரிமதாரர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No.17518,17530,17557,17567,17570,17573, 17576, 17580,17582/2020-- ன்படியும், 14 கடைகளின் உரிமதாரர்களால்சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No.18946, 18955, 18962, 18968 to 18970, 18972,18986 **to**18989,19005, 19011மற்றும் 19013/ 2020 ன்படியும், 23 நபர்களால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பாணை நாள்.04.12.2020 மற்றும் 22.12.2020ல் மனுதாரர்களுக்கு உரிய நேரடி விசாரணைக்கு வாய்ப்பளித்து புதியதாக பரிசீலனை செய்து சட்ட விதிகளுக்கு உட்பட்டு உத்தரவு பிறப்பிக்க உத்தரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14/2021/ஆர்–2 நாள் 12.02.2021 மற்றும் 23.02.2021 (9 கடைகள்) மற்றும் நாள்.08.03.2021ல் (14 கடைகள்) கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு நேரடி விசாரணைக்கு ஆஜராக கோரி இவ்வலுவலக அறிவிப்பு வாயிலாக சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட 23 நபர்களும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது கோரிக்கையினை எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 14/2021/ஆர் – 2 நாள் 29.03.2021 **(9 கடைகள்)** மற்றும் ந.க.எண் 14/2021/ஆர் – 2 நாள் 29.03.2021 **(14 கடைகள்)** செயல்முறைகளில் வரிசை எண் 12 மற்றும் 13 ல்

*12)மேற்படி கோரிக்கைகள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. குத்தகைதாரர்கள் ஏற்கனவே செலுத்தி வந்த வாடகையை விட மறு மதிப்பீட்டு குழுவினரால் நிர்ணயம் செய்த மாத வாடகை மூன்று மடங்கு முதல் ஆறு மடங்கு வரை உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 2016–ம் ஆண்டு வாடகையில்15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகைத் தொகைக்கும் 2016 சார்பதிவாளர் வழி காட்டு மதிப்பின் படி பொதுப்பணித்துறை தரப்படுத்தப்பட்ட விலைவிகிதத்திற்கும், 2016 அங்காடி மதிப்பீட்டிற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையிலான குத்தகை கண்காணிப்பு குழு நிர்ணயம் செய்த வாடகைக்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளது. எனவே, மேற்படி வேறுபாடுகளை களைந்து, மனுதாரர்களின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, வாடகை விகிதங்களை முறைப்படுத்தி வாடகை மறு நிர்ணயம் செய்ய வேண்டிய நிலை எழுந்துள்ளது,*

*13)ஆனால், நகராட்சி சட்ட நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி நகராட்சிகளில் உள்ள அசையா சொத்துக்களை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட ஏதுவாக, குத்தகை தொகையினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் அந்தந்த நகர் மன்றங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே, கடந்த 13.10.2020 அன்று கரூர் நகர் மன்றத்தால் எழுப்பப்பட்டுள்ள கேட்பு மாண்பமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதுடன், மேற்படி கோரிக்கை குறித்து புதிதாக பரிசீலனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதால் குத்தகை கண்காணிப்பு குழு மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு, புதிதாக குத்தகை தொகையை மதிப்பு செய்து, கரூர் நகர் மன்றம் ஒப்புதல் அளிப்பதற்கு ஏற்ப, மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்று மறு ஆய்வு செய்திட குத்தகை கண்காணிப்பு குழுவிற்கு உத்தரவிடப்படுகிறது.*என செயல்முறை உத்தரவுகள் வரப்பெற்றுள்ளது.

இவ்வலுவலக ந.க.எண் அ6/2196/2016 நாள் 15.04.2021ல் கடிதம் வாயிலாக மேற்கண்ட பொருள் குறித்து தக்க அறிவுரை வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் நே.மு.க.எண்.599/2019/அ5 நாள்.20.05.2021ல் நேர்முக கடிதத்தில் உரிய காலத்திற்குள் மண்டல கண்காணிப்பு குழுவிற்கு பிரேரணையை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

அதன்படி இவ்வலுவலக ந.க.எண் 2196/2016/அ6 நாள் 10.08.2021 கடிதம் வாயிலாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி 14 + 9 கடைகளின் உரிமதாரர்களுக்கு, மண்டல கண்காணிப்பு குழுவில் வாடகை பரிசீலனை செய்திட முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் கரூர் நகராட்சியானது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் மேற்படி முன்மொழிவுகள் நிலுவையில் இருந்து வருவதால் கரூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2196/2016/அ6 நாள்.03.06.2022ன் படி வாடகை மறு நிர்ணயம் செய்திட குழு அமைந்து உத்திரவிடப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. ஆனால் கடை உரிமை தாரர்களில் 28 நபர்கள் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வாடகையினை மறு நிர்ணயம் செய்து தர கோரி வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கின் தீர்ப்பில் கடை உரிமதாரர்களை அழைத்து விசாரணை செய்து 8 வார காலத்தற்குள் முடிவினை மாநகராட்சி சார்பில் தெரிவித்து தொகையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க தெரிவித்தள்ளனர். அதன்பேரில் கடை உரிமதார்களுக்கு மாநகராட்சி சார்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டு 21.11.2022 மற்றும் இரண்டாம் மற்றும் இறுதி விசாாணை 25.11.2022ம் தேதி மாலை 3.00 மணிக்கு நடைபெற்றது.

ஆனால் கடை உரிமைதாரர்களால் 02.12.2022 மற்றும் 06.12.2022 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்ட விண்ணபத்தில் பேருந்து நிலையத்தில் சுற்றி பல நூறு கடைகள் உள்ளன. அதனால் பேருந்து நிலையத்தில் கடைகளுக்கு வியாபாரம் குறையும், நாங்கள் நடத்தும் கடைகள் கட்டிடம் பழமையானது எங்களுக்கு உயர்த்தப்பட்ட வாடகை அதிகமானது ஆகையால் எங்களது கடைக்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மற்றும் மன்றபொறியாளர், வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் பொதுப்பணித்துறை பொறியாளர் அவர்கள் வாயிலாக சட்டவிதியில் கீழ் உட்பட்டு மறுமதிப்பீடு வடகை நிர்ணயம் செய்து தரும்படியும் மற்றும் நீதிஅரசர் உத்தரவுப்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அறிவுறுத்துதலின்படியும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு நிதி இழப்பு ஏற்படாமல் அதே நேரத்தில் எங்களது வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையிலும் நடுநிலையோடு நியாயமாக பொதுப்பணித்துறை பொறியாளர் வாயிலாக வாடகையை நிர்ணயம் செய்து தரவேண்டும் எனகேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆனால் 2016ல் வாடகை நிர்ணயம் செய்யும் போது அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி3) துறை நாள்.03.07.2007ன் படி அன்றைய தேதியில் உள்ள அலுவலர்கள் உரிய சட்ட விதிகளின்படி சார்பதிவு அலுவலக வழிகாட்டுதலின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் அவர்களின் பொது பணித்துறை கணக்கீட்டுத்தாள் விலை விகிதத்தின்படி உள்ளூர் சந்தை மதிப்பின் அடிப்படையில் மேற்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அரசாணையின் படி ஏற்கனவே நிர்ணயம் செய்து முடிவு செய்த நிலையில் தற்போது மனுதாரர்களின் கோரிக்கை மற்றும் மாநகராட்சி நிதியிழப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அன்றைய தேதியில் இருந்து வாடகை பரிசீலிக்க முரண்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் ஒவ்வொரு கடையினுடைய அளவுகள் மற்றும் ஏலத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள வடகை வேறுபாடாக உள்ளதால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவின்படி கரூர் மாநகராட்சி வருவாய் அலுவலர் (பொ) அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது மேற்படி கடைகளை நேரடி ஆய்வு செய்தும் கடை உரிமதாரர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்தும் கடை வாடகையினை மறுநிர்ணயம் செய்ய கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளது. மேற்படி பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

# மாநகராட்சி குழு பரிந்துரை

| வ. எண் | குத்தகை இனத்தின் விபரம் | | | | ஏற் கனவே உள்ள வாடகை | அரசு ஆணை எண்.92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 03–07–2007–ன் படி தற்போதைய அங்காடி மதிப்பீட்டின்படி மறு நிர்ணயம் செய்ப்பட்டு குத்தகை ஒப்ளிப்பு செய்யப்பட்ட தொகை விபரம் | அரசாணையின் படி தற்பொழுது குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை | 30% less | Revised | மாநகராட்சி வாடகை மதிப்பீட்டு குழு குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வரி விதிப்பு எண் | பெயர் | கடை விரம் | சதுர அடி | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 1 | 20000321 | ஜி.மாதஸ் வரன் | பு. பே.நி.கடை எண்.22 | 240 | 3405 | 24000 | 25000 | 6179 | 17822 | ஏற்கனவே உயர்த்தப்பட்ட வாடகையில் 30 சதவீதம் 01.07.2016 முதல் குறைத்தும் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) நாள்.03.07.2007 ன் படி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகை உயர்வு செய்து புதுப்பித்தல் செய்யலாம் |
| 2 | 20000322 | ஆர்.ராசு | பு. பே.நி.கடை எண்.23 | 72 | 1739 | 7500 | 7500 | 1728 | 5772 | |
| 3 | 20000323 | என்.நாக ராஜ் | பு. பே.நி.கடை எண்.24 | 240 | 7740 | 25000 | 25000 | 5178 | 19822 | |
| 4 | 20000324 | எம்.கிருஷ்ணன் | பு. பே.நி.கடை எண்.25 | 240 | 6212 | 25000 | 25000 | 5636 | 19364 | |
| 5 | 20000325 | ஆர்.தங்க வேல் | பு. பே.நி.கடை எண்.26 | 240 | 7431 | 25000 | 25000 | 5271 | 19729 | |
| 6 | 20000326 | ஆர்.ரெங்க ரத்தினம் | பு. பே.நி.கடை எண்.27 | 72 | 7183 | 10000 | 10000 | 845.1 | 9155 | |
| 7 | 20000328 | என்.ராஜம் | பு. பே.நி.கடை எண்.29 | 240 | 7142 | 25000 | 25000 | 5357 | 19643 | |
| 8 | 20000330 | பி.புவனேஸ்வரி | பு. பே.நி.கடை எண்.31 | 72 | 8091 | 10000 | 10000 | 572.7 | 9427 | |
| 9 | 20000331 | பி.ஜி.துரை | பு. பே.நி.கடை எண்.32 | 240 | 9223 | 25000 | 25000 | 4733 | 20267 | |
| 10 | 20000336 | பி.ராமசாமி | பு. பே.நி.கடை எண்.33 | 154 | 1447 | 20000 | 20000 | 5566 | 14434 | |
| 11 | 20000337 | எஸ்.ராஜ கோபால் | பு. பே.நி.கடை எண்.34 | 154 | 1111 | 20000 | 20000 | 5667 | 14333 | |
| 12 | 20000338 | யூ.ஆர்.சட கோபால் | பு. பே.நி.கடை எண்.35 | 154 | 2161 | 20000 | 20000 | 5352 | 14648 | |
| 13 | 20000343 | எம்.கிருஷ்ணன் | பு. பே.நி.கடை எண்.36 | 154 | 2776 | 20000 | 20000 | 5167 | 14833 | |
| 14 | 20000344 | பி.முத்து லட்சுமி | பு. பே.நி.கடை எண்.37 | 154 | 2717 | 20000 | 20000 | 5185 | 14815 | |
| 15 | 20000346 | கே.ராம் குமார் | பு. பே.நி.கடை எண்.39 | 154 | 3125 | 20000 | 20000 | 5063 | 14938 | |
| 16 | 20000349 | கே.எம்.சந்திரசேகர் | பு. பே.நி.கடை எண்.41 | 154 | 3548 | 16000 | 16000 | 3736 | 12264 | |
| 17 | 20000351 | கே.வைர பெருமாள் | பு. பே.நி.கடை எண்.43 | 154 | 3114 | 16000 | 16000 | 3866 | 12134 | |
| 18 | 20000352 | என்.ராம சாமி | பு. பே.நி.கடை எண்.44 | 154 | 2895 | 16000 | 16000 | 3932 | 12069 | |
| 19 | 20000353 | இ.துரைச் சாமி | பு. பே.நி.கடை எண்.45 | 154 | 3059 | 18000 | 18000 | 4482 | 13518 | |
| 20 | 20000354 | ஜல்சா குமாரி | பு. பே.நி.கடை எண்.46 | 154 | 2696 | 16000 | 15000 | 3991 | 12009 | |
| 21 | 20000355 | கே.சரஸ்வதி | பு. பே.நி.கடை எண்.47 | 154 | 2624 | 16000 | 15000 | 4013 | 11987 | |
| 22 | 20000356 | எஸ்.பி. மருதை | பு. பே.நி.கடை எண்.48 | 154 | 5203 | 18000 | 18000 | 3839 | 14161 | |
| 23 | 20000357 | எம்.கருப்பணன் | பு. பே.நி.கடை எண்.49 | 154 | 3452 | 18000 | 18000 | 4364 | 13636 | |
| 24 | 20000041 | கே.ராமசாமி | பு.பே.நிலையம் வடக்கு கடை எண்.1 | 144 | 3517 | 12000 | 11500 | 2545 | 9455 | |
| 25 | 20000042 | எஸ்.ஜெய ராமன் | பு.பே.நிலையம் வடக்கு கடை எண்.2 | 144 | 4198 | 12000 | 11500 | 2341 | 9659 | |
| 26 | 20000043 | கே.முனு சாமி | பு.பே.நிலையம் வடக்கு கடை எண்.3 | 144 | 2919 | 12000 | 11500 | 2724 | 9276 | |
| 27 | 20000045 | ஜி.பாஸ் கரன் | பு.பே.நிலையம் வடக்கு கடை எண்.5 | 144 | 4741 | 10000 | 11500 | 1578 | 8422 | |
| 28 | 20000222 | எம்.புஷ்பா | மினிபேரூந்து நிலைய கடை எண்2 | 156 | 3310 | 15000 | 15000 | 3507 | 11493 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | 20000329 | ராமு (எ) ராமசாமி ஆர்.பழனியம்மாள் | பு.பே.நிலையம் வடக்கு கடை எண்.30 | 240 | 4708 | 25000 | 25000 | 5357 | 19643 | |
| 30 | 20000215 | காளியப்பன் | கோவை சாலை கடை எண்.5 | RCC 150 AC 60 | 1042 | 18000 | 18000 | 4482 | 13518 | |

**அலுவலக குறிப்பு**
மாநகராட்சி வாடகை நிர்ணய குழு பரிந்துரையினை மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
(2196/2016/அ6)

**தீர்மான எண்.884** மாநகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட 30 கடைகளுக்கு நிலுவைத் தொகை முழுவதும் செலுத்தும்பட்சத்தில் வாடகை குறைப்பு செய்து ஈடுசெய்ய மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**4)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 வார்டு எண்.20 முதல் 27 மற்றும் 29–35 பகுதியில் பொதுமக்களுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 110 திட்டத்தில் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்திட பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றிட தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் அதிக அளவு கனமழை பெய்ததால் காவிரி ஆற்றில் சுமார் 2.50 இலட்சம் லிட்டர் தண்ணீர் வந்தததால் பழுது ஏற்பட்டதின் காரணமாக மின் மோட்டார் கிணற்றுக்குள் விழுந்து மின் “?மோட்டார் பழுது ஏற்பட்டது. மேற்படி மின் மோட்டார் பொருத்தப்பட்டுள்ள கேணிக்கு செல்வதற்கு போதிய பாதை இல்லாததால் புதியதாக பாதை அமைத்தற்கு மின் மோட்டார் கழன்று பழுது ஏற்படும் நிலை ஏற்பட்டது. எனவே மேற்படி பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.40 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.2.40 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/744/2022)

**தீர்மான எண்.885** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**5)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட முத்துகுமாரசாமி பேருந்து நிலையத்தில் உள்ள இலவச பொதுக்கழிப்பிடம் ஆண்கள் மற்றும் பெண்கள் சிறுநீர் கழிப்பிடம் பழுது ஏற்பட்டு பயணிகள் பயன்படுத்த சிரமமாக உள்ளதால் பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை பராமரிப்பு செய்தல் பணி மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் பழுது ஏற்பட்டதால் அதனை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.25இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.7.25 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.886** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)** கரூர் மாநகராட்சி மண்டலம் –2 மற்றும் மண்டலம் 1க்கு வார்டு எண்.2,7,8,26,27,28, மற்றும் 29 பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மேலமாயனுாரில் முகுறு திட்டம் 90 எச்.பி மின் மோட்டார் 2 எண்ணிக்கை பொருத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மின் மோட்டார் யூனிட்–2 பேரிங் மற்றும் காயில் பழுது ஏற்பட்டு மின்மோட்டார் இயங்காமல் உள்ளது. எனவே மேற்படி மின் மோட்டார் யூனிட்–2 பழுது பார்க்க தயார் செய்யப்பட்டதயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ3.20 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/704/2022)

**தீர்மான எண்.887** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**7)** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 மற்றும் மண்டலம் 1க்கு வார்டு எண்.2,7,8,26,27,28, மற்றும் 29 பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மேலமாயனுாரில் முகுறு திட்டம் 90 எச்.பி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார் யூனிட் – 1 பேரிங் மற்றும் காயில் பழுது ஏற்பட்டுள்ளதை உடன் பழுது பார்க்கும் பணிக்குதயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ3.60 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/705/2022)

**தீர்மான எண்.888** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**8)** கரூர் மாநகராட்சி வார்டு எண்.26 காமராஜபுரம் மெயின் ரோடு காமராஜபுரம் 3வது குறுக்குத் தெரு, 1வது குறுக்குத் தெரு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள புதைவடிகால் மெயின் லையன் 450mm ஆர்.சி.சி பைப் பழுது ஏற்பட்டு புதைவடிகாலில் கழிவுநீர் செல்லாமல் சாலையில் வழிந்து ஒடுகிறது. இதனால் சுகாதார பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளதால் பழுது ஏற்பட்ட புதை வடிகால் மெயின் லையனை மாற்றியமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ5/684/2022)

**தீர்மான எண்.889** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**9)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–27 மற்றும் வார்டு எண்.28–35 வரையுள்ள பகுதிகளில் நெரூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்தில் யூனிட் மற்றும் யூசி மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 100 எச்.பி மின் மோட்டார் யூனிட் 1 பழுது ஏற்பட்டு மின்மோட்டார் இயக்க முடியாமல் உள்ளது. எனவே மேற்படி பழுது ஏற்பட்டுள்ள மோட்டார்களை மாற்றும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.95 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.3.95 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/701/2022)

**தீர்மான எண்.890** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**10)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–27 மற்றும் வார்டு எண்.29–35 வரையுள்ள பகுதிகளில் நெரூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்தில் மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நெரூர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள திறந்தெவெளி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 20 எச்.பி மின் மோட்டார் பாலம்மாள்புரத்தில் நீருந்து நிலையத்தில் உள்ள 30 எச்.பி மிற்றும் 40 எச்.பி மின் மோட்டார் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி மின் மோட்டார் பழுது பார்க்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.90இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.90 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/700/2022)

**தீர்மான எண்.891** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**11)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் பழுது ஏற்பட்டுள்ள தென்புற கடைகளை இடித்து அப்புறப்படுத்த வேலை உத்திரவு வழங்கி பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது. மேற்படி பகுதியில் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு கருதி தடுப்பு அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி கட்டிடம் இடிக்கும்போது இடிக்கப்படும் பொருட்கள் பயணிகள் மேல் விழாமல் தடுக்கும் பொருட்டு தடுப்புகள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.15இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.15இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.892** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**12)** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கரூர் மாநகராட்சியை திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநகராட்சியாக அறிவிப்பதில் பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை அல்லது ஆலோசனை இருந்தால் 15 நாட்களுக்குள் கரூர் மாநகராட்சி அலுவலகத்தில் எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என்ற அறிவிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கரூர், அவர்களின் வழியாக தினசங்கு தமிழ் நாளிதழில் 03.12.2022–ம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணத் தொகை ரூ.22000/–ஐ (இருபத்தி இரண்டாயிரம் மட்டும்) விளம்பர மேலாளர், தினசங்கு தினசரி நாளிதழ் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத் தொகை ரூ.22000/–ஐ பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (8089.2014.எச்1)

**தீர்மான எண்.893** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2, வார்டு–32ல் உள்ள மாநகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலை பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் Basket Ball, Air Pump, Gymnastic Mat, Judo Kit, Carrom Board, Coins மற்றும் Weight Machine தேவைபடுவதாக தலைமை ஆசிரியர், பசுபதீஸ்வரா மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி கோரியுள்ளார். எனவே, மாநகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் Basket Ball, Air Pump, Gymnastic Mat, Judo Kit, Carrom Board, Coins மற்றும் Weight Machine வாங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.1.60இலட்சத்தை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினனம மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.894** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**14)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 வார்டு எண்.32 பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கிழக்கு பகுதியில் பழுதான ஆய்வகம், சமையல் அறையை அகற்றிவிட்டு புதியதாக நவீனமாக வகுப்பு அறை மற்றும் ஆய்வகங்கள் வடிவமைப்பு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் விளக்க தொழில்நுட்ப அனுமதி பெற்று தரும் வரை ஆலோசகர் தேவைப்படுகிறது. மேற்காணும் பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2.60 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினம் ரூ.2.60 இலட்சத்தை மாநகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.895** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**15)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 வார்டு எண்.33 படிக்கட்டுத்துறை, வாய்க்கால் மேடு, போர் மோட்டார்கள் உள்ளது. ஆனால் ஆற்றங்கரை ஒரமாக உ.ள்ள வீடுகளுக்கு போர் தண்ணீர் வசதி இல்லாமல் சிரமப்பட்டு வருகிறார்கள் மற்றும் படிக்கட்டுத்துறை சத்துணவு மையத்திற்கு கீழ்புறமாக உள்ள அமராவதி பாலத்தின் படிக்கட்டுக்கள் கைப்பிடி சேதம் அடைந்து பொதுமக்கள் உபயோகிக்க சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்களின் நலன் கருதி படிக்கட்டுத்துறை பகுதியில் குடிநீர் குழாய் அமைத்து மற்றும் அமராவதி பாலத்தில் . படிக்கட்டுகள் கைப்பிடி அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.0.80 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினம் ரூ.0.80 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.896** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**16)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 வார்டு எண்.30 அண்ணா நகர் பகுதியில் குடிநீர் பிரதான குழாய்கள் அமைத்து சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆன காரணத்தால் குடிநீர் குழாய்கள் பழுது ஏற்பட்டதால் அண்ணா நகர் பகுதி குடிநீர் இணைப்பு குழாய்களில் குடிநீர் கலங்கி வருகிறது. இதனால் இப்பகுதி பொதுமக்களுக்கு சுகாதார சீர் கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வார்டு எண்.30 அண்ணா நகர் விறகு கடை உள்ள போர்வெல் சின்டெக்ஸ் பிளாட்பாம் மற்றும் அண்ணா நகர் முதல் குறுக்குத் தெருவில் உள்ள போர்வெல் மோட்டாருக்கு சின்டெக்ஸ் தொட்டி மற்றும் பிளாட்பாம் இல்லாத காரணத்தால் அப்பகுதி மக்கள் தண்ணீர் வசதி இல்லாமல் சிரமப்பட்டு வருகிறார்கள்.

மேற்கண்ட வார்டு எண்.30 அண்ணா நகர் பகுதியில் புதியதாக குடிநீர் பிரதான குழாய்களை அமைக்கவும், மற்றும் அண்ணா நகர் இரண்டு பகுதிகளில் புதியதாக இரண்டு சின்டெக்ஸ் தொட்டி மற்றும் பிளாட்பாம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.897** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**17)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 வார்டு எண்.31 திருப்பதி லே அவுட் 4வது கிராஸ் பகுதியில் குடிநீர் பிரதான குழாய் அல்லாத காரணத்தால் அப்பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுக்களின் நலன் கருதி புதியதாக குடிநீர் பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினம் ரூ.1.80 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.898** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**18)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2 மாநகராட்சி கோட்டைமேடு உயர்நிலைப் பள்ளியின் நிலத்தடி நீர் தொட்டியில் கசிவு ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில உள்ளது. மாணவிகள் கழிவறையை எரியூட்டி பொருத்தவும். வகுப்பறைகளுக்கு தேவையான பெஞ்ச் மேஜை மற்றும் ஆசிரியர்களுக்கு தேவையான மேஜை நாற்காலிகள், பீரோ, கப்போர்டு மற்றும் நூலகம் பீரோ ஆகிய பொருட்கள் வேண்டும் என்று மாநகராட்சி கோட்டைமேடு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் கோரியுள்ளார். மேற்கண்ட நிலத்தடி நீர் தொட்டி சீரமைக்கவும் மற்றும் கழிவறை எரியூட்டி வாங்க மற்றும் பள்ளிக் கூடத்திற்கு தேவையான பெஞ்ச் மேஜை,

நாற்காலி, பீரோ மற்றும் பள்ளிக் கூடத்தின் பெயர் பலகையை புதுப்பிக்கவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினம் ரூ.12.00இலட்சத்தை மாநகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2022)

**தீர்மான எண்.899** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மேயர்
கரூர் மாநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி